தெடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த முறையில் இந்த ஆண்டு 10 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இது தவிர, மாவட்டந்தோறும் தமிழில் திறமை பெற்றவர்களுக்கு அவர்களின் தமிழ் ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு இரண்டு பரிசுகள் சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

தனியார் பள்ளிகள்

*649 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா?

1971-ம் ஆண்டு எத்தனை, எந்தெந்த தனியார் பள்ளிகளை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்புள்ளது—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கீழ்க்கண்ட 3 உதவி பெறும் பள்ளிகளின் நிர்வாகத்தினர் தங்கள் உயர்நிலைப்பள்ளிகளை அரசு ஏற்று நடத்தும்படி கேட்டுள்ளனர்:—

1. இந்து உயர்நிலைப்பள்ளி, காளாம்பட்டி, நெல்லை மாவட்டம்.
2. கன்யா குருகுலம் வாசுகி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருவொற்றியூர், செங்கை மாவட்டம்.
3. பாரதி நாராயணசுவாமி உயர்நிலைப்பள்ளி, சில்லமரத்துப்பட்டி மதுரை மாவட்டம்.

இக் கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே. அரசு ஏற்று நடத்த இருக்கின்ற பள்ளிகளில், காளாம்பட்டி பள்ளியை இந்த ஆண்டே எடுத்து நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே நிர்வாகத்தினர் அரசைக் கேட்டிருக்கிறார்கள். அரசு அதுபற்றிய விபரங் களை தெரிவிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குனரைக் கேட்டிருக்கிறது. அவர்கள் மாவட்ட தலைமை கல்வி அதிகாரியைக் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுக்குள்ளேயே முழு விபரமும் தெரிந்துவிட்டால், இந்த ஆண்டே ஏற்று நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மெக்காவாய் உயர்நிலை ஆரம்பப்பள்ளி

* 650 வினா—திரு. எம் முத்தையா : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா.—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் மெக்காவாய் உயர் நிலை ஆரம்பப்பள்ளி நிர்வாகியால் நடத்தப்பட்டு வரும் ஹாஸ்டலில் உணவு,உடை விஷயமாக ஊழல் என்று மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சமீபத்தில் தணிக்கை செய்தாரா ?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒட்டப்பிடாரம் யெக்காவாய் உயர்நிலை ஆரம்பபள்ளி நிர்வாகியால் நடத்தப்பட்டுவரும் இன்டர்பெய்த் குழந்தைகள் இல்லம் திருநெல்வேலி முதன்மைக்கல்வி அலுவலரால் 1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியில் தணிக்கை செய்யப்பட்டது. ஆனால் உணவு, உடை சம்பந்தமாக ஊழல் எதும் கண்டுபிடிக்கப்படவில்லை. வேறு பல ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(இ) திருநெல்வேலி மாவட்டக் கல்வி அதிகாரி முதன்மைக்கல்வி அலுவலரால் கண்டு பிடிக்கப்பட்ட ஒழுங்கீனங்கள் குறித்து ஒரு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அது பெறப்பட்டதும் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, அந்த அறிக்கை எப்போது அளிக்கப்படும் ? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பணியாளர் வருகைப் பதிவேட்டில் 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை கையெழுத்துப் போடப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை சம்பளப் பட்டியலில் கையெழுத்திடப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி வரையில் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டப்பட்டிருக்கிறது. 1971-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ந் தேதி வரையில் பணியாளர்கள் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதுபற்றி தலைமை கல்வி அதிகாரியிடம் அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அவரிடமிருந்து அறிக்கை வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வேம்பார்பட்டி ஊராட்சி

*651 வினு—திரு. க. நாகராஜன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வேம்பார்பட்டி (திண்டுக்கல் வட்டம்) கிராமப் பஞ்சாயத்தை ஒரு நகர பஞ்சாயத்து ஆக்க அரசு நடவடிக்கை விரைந்து எடுக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. க. நாகராஜன் : தலைவரவர்களே, இந்த வேம்பார்பட்டியை நகரப் பஞ்சாயத்தாக ஆக்காவிட்டாலும் கூட, அங்கே ஒரு வாரச் சந்தை இருக்கிறது. அதை தனியார் நடத்தி வருகிறார்கள். பஞ்சாயத்தே எற்று நடத்தினுல் நல்ல லாபம் கிடைக்கும். எனவே, அதைப் பஞ்சாயத்தே எற்று நடத்துவதற்கு அரசாங்கம் அறிவுரை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.